**ஊராட்சிகளில் பணியாற்றும் மக்கள்நலப்பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள், விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் போன்றவர்களுக்கு 2006 –2007ம் ஆண்டுக்கு பொங்கல் கருணைத் தொகை வழங்குதல்.**

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்(இ5) துறை

அரசாணை (2டி) எண்: 3 நாள்:– 25.1. 2008.

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (இரு பத்தாண்டுகள்) எண்.24, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 10.4.2007.
2. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் நேர்முக கடித எண்.114/2008/இ4 நாள் 10.1.2008.

***

**ஆணை**

ஊராட்சிகளில் பணிபுரியும் முழுநேர/பகுதிநேர எழுத்தர்கள், துப்புரவுப் பணியாளர்கள், விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் போன்ற ஊராட்சிப் பணியாளர்களுக்கு 2005–2006 ஆம் ஆண்டுக்கான பொங்கல் கருணைத் தொகையாக ரூ.300/– ( ரூபாய் முன்னூறு மட்டும்) வழங்கப்பட்டது.

2. மக்கள் நலப்பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் போன்ற ஊராட்சிப் பணியாளர்களுக்கு சென்ற முறை வழங்கப்பட்டவாறு இந்த ஆண்டும் பொங்கல் கருணைத் தொகை வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்தது.

3. ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப்பணியாளர்கள் விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர், துப்புரவுப் பணியாளர் போன்ற பணியாளர் ஒவ்வொருவருக்கும் 2006–2007 ஆம் ஆண்டு பொங்கல் கருணைத் தொகையான 300/– (ரூபாய் முன்னூறு மட்டும்) தொடர்புடைய ஊராட்சி நிதியிலிருந்து வழங்க அனுமதித்து அரசு ஆணையிடுகின்றது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா..எண். 17/DS(B)/08 நாள்:–14.1.2008 ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்.